[வலைப்பின்னல் மாற்று முறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1999 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கெஸ்பாவ அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

[1999, ஏப்பிறல் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1999, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம்** பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை: ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 3.50**

*(1999ஏப்பிறல்மாதம்09 ஆந்திகதிஅத்தாட்சிப்படுத்தப பட்டது.)*

*ச.வ-ஒ. 30/94*

**கெஸ்பாவ அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்ப தற்கானதொரு சட்டம்**

"கெஸ்பாவ அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒரு கழகம், அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றி அத்துடன் அதன் குறிக்கோள்களையும் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும்; *முன்னுரை.*

சொல்லப்பட்ட கழகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரையில் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாலாலும் ,அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக விருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கெஸ்பாவ அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கெஸ்பாவ அபிவிருத்தி மன்றத்தில் உறுப்பினர்களாகத் தற்போதுள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் "கெஸ்பாவ அபிவிருத்தி மன்றம்" என்னும் பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறா வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தலும் வேண்டும்; (இது இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்துடன் எல்லா நீதிமன்றங்களிலும் அப்பெயர் கொண்டு,அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற் கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும். *கெஸ்பாவ அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

*கூட்டுத்தாபனத்தின் பொதுக்குறிக்கோள் கள்.*

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

(அ) நாட்டினுள் சமுதாய சேமநல, பண்பாட்டு, சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேம்படுத்துதலும் அவற்றின் செயற்பாடில் ஈடுபடுதலும்;

(ஆ) வீதி அபிவிருத்தி அத்துடன் வீடமைப்புத் திட்டங்கள் என்பனவற்றின் நிறைவேற்றுதலையும்,ஆசுப்பத்திரிகள், கல்விநிலையங்கள், பாடசாலைகள், சமுதாய நிலையங்கள்,பாடசாலைகள், சமுதாய நிலையங்கள் என்பவற்றையும் நாடு பூராவும் அபிவிருத்திக்கு உதவக்கூடிய அத்தகைய வேலைகளையும் செயற்பாடுகளையும் நிர்மாணித்தலையும் மேம்படுத்துதலையும் பொறுப்பேற்றல்;

(இ) உடைகளை, அறிவுறுத்தலுக்கான கட்டணங்களை அல்லது வேறு வாழ் வசதிகளை வறுமையான பிள்ளைகளுக்கு ஏற்பாடு செய்து கொடுப்பதும் அத்தகைய வேறு வழிவகைகளின் மூலமும் வறுமையான நிலையிலுள்ள பிள்ளைகளுக்கு, ஒரு தொழிலுக்காக, தான்புரி தொழிலுக்காக அல்லது சேவைக்காக ஆயத்தம் செய்வதற்கான, அதை தொடங்குவதற்கான அல்லது அதில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை அளித்தலும்;

(ஈ) கல்வியையும், அறிவையும் முன்னேற்றுவதற்காகவும் பரப்புவதற்காகவும், பரவச் செய்வதற்காகவும், உதவிப்பணங்கள், புலமைப் பரிசில்கள், பரிசுகள், நன்கொடைகள், நிதியுதவி அத்துடன் வேறு வகையிலான உதவி என்பவற்றை ஏற்பாடு செய்தலும், பாடசாலைகள், நூலகங்கள், பண்பாட்டு நிலையங்கள் என்பவற்றைத் தாபித்தலும்;

(உ) ஏதேனும் கைத்தொழிலில் அல்லது தொழிலில் அல்லது ஏதேனும் ஏற்றுமதி அல்லது இறக்குமதித் தொழிலில், ஈடுபடுதலும், கமத்தொழில், கைத் தொழில்,வர்த்தக முயற்சிகளை அத்துடன் குறிப்பாக கடற்றொழில், தும்பு, வெண்தும்பு, தும்பு உற்பத்திப் பொருள்கள் என்பவற்றை ஏற்றுமதி செய்தல் போன்ற கைத்தொழில்களைத் தொடங்குவதற்கும் தொழிற்படுத்துவதற்கும் ஆட்களுக்கு உதவுதலும் துணைபுரிதலும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் விசாலிப்புச் சேவைகளையும் பொறுப்பேற்றலும், தொழினுட்பத்தைக் கைமாற்றுவது தொடர்பாகப் பிரசாரச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தலும்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அதே குறிக்கோள்களையுடைய வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நிறுவனம் அல்லது ஒழுங்கமைப்பு எதனுடனும் ஒத்துழைத்தலும், அல்லது பங்குபற்றுதலும்;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேலெடுத்துச் செல்வதற்காக இலங்கையிலும் வேறெங்கேனும் மாநாடுகள் கருத்தரங்குகள், வேலைக்களங்கள், தொகுதிக் கற்கைகள், அத்துடன் விரிவுரைகள் என்ப வற்றுககு ஆதரவளித்தலும் அவற்றை நடாத்துதலும்

(ஏ) கூட்டுத்தாபனம் அதன் குறிக்கோள்களை மேம் படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் விரும்பத் தக்கவையென கருதக்கூடிய புத்தகங்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், செய்திதாள்கள் அத்துடன் பருவவிதழ்கள் என்வற்றை அச்சிடுத லும், வெளியிடுதலும் விநியோகித்தலும்;அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் எய்துவதற்கு அவசியமானவாறாக், இடைநேர் விளைவாக அல்லது உகந்தவாறாக இருக்கக்கூடிய அத்தகைய வேறு செயல்களை. அத்துடன் காரியங்களைப் புரிதலும்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும், கட்டுப்பாடும் நிருவாகமும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, (இதனகத்துப்பின்னர் "பேரவை" என குறிப்பீடு செய்யப்படும்) ஆளும் பேரவையொன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க், உறுப்பினர்களிடையேயிருந்து தேர்நதெடுக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான ஆளுநர்களை இப்பேரவை கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது, பேரவையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் பதவிவகிக்கின்ற மன்றத்தின் ஆளும் பேரவையாதல் வேண்டுமென்பதுடன், இதனோடு, உள்ள அட்டவணையில் எவ்வுறுப்பினரின் பெயர்கள் குறித்துரைக் கப்படுகின்றனவோ அவ்வுறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ளது எது எப்படியிருப்பினும், தமது பதவியிலிருந்து முன்னரே விலகிக் கொண்டாலன்றி, திரு. காமினி லொக்குகே அவர்கள் சீவியகாலத்திற்கு கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியை வகித்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் இடாப்பு.

**5.** பேரவை, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் மன்றத்தின் உறுப்பினரொருவராயிருக்கும் ஒவ்வோர் ஆளும், அத்துடன், கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக அதன் பின்னர் உரிய முறையில் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வோர் ஆளும் அவருடைய பெயரைச் சேர்த்துக்கொள்ள வேண்டிய இடாப்பொன்றை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

ஆதனத்தைக் கொள்ளுதல், நிதிகளை முதலீடு செய்தல், கடன்களைத் திரட்டுதல் முதலிய வற்றுக்கான கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**6.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்துக்கும் அமைய, கூட்டுத்தாபனம் பின்வருவனவற்றிற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப் படக்கூடிய காணிகளை அல்லது கட்டடங்களைக் கொள்வனவு செய்தலும், கொள்ளுதலும், வாடகைக்கு எடுத்தலும் நிருமாணித்தலும் வேறு வகையில் பெறுதலும்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல்;

(இ) நாணய மாற்றுண்டியல்களையும், காசோலைகளையும் வாக்குறுதிப் பத்திரங்களையும், ஏனைய கைமாற்றத்தகு சாதனங்களையும் ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக்கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும் புறக்குறிப்பிடுதலும் மாற்றுதலும் வாங்குதலும், விற்றலும், வழங்குதலும், வங்கிக் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்துதலும், பேணுதலும், மூடுதலும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளைப் பேரவை பொருத்தமானதெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல்;

(உ) ஒப்பப்பணங்கள், மானியக்கொடைகள், நன்கொடைகள் அத்துடன் எவ்வகையினவுமான கொடைகள் என்பவற்றைப் பரிந்து கேட்டலும் பெறுதலும் ;

(ஊ) எவரேனும் ஆளுடன், ஏதெனும் கம்பெனியுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதல் ;

(எ) ஏதேனும் நிலஞ்சார் அல்லது ஆள்சார் ஆதனங்களுடன் சம்பந்தப்பட்ட எவையேனும் சட்ட முறையான நம்பிக்கைப் பொறுப்புகளையும் நிபந்தனைகளையும் அத்துடன் வேறு ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்புக்களையும் பொறுப்பேற்றல், ஏற்றுக்கொள்ளுதல் நிறைவேற்றுதல் புரிதல் அத்துடன் நிருவகித்தல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிக்கமர்த்துதலும், பதவி நீக்குதலும் அல்லது பதவி முடிவுறுத்தலும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும் படிகளையும் பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினருக்குப் பயிற்சியளித்தல் அத்துடன் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைத் தகுந்தவாறும் பயனுறவும் நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான வேறெல்லாக் காரியங்களையும் செய்தல் ;

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** *(1)* ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமூகமாயிருந்து வாக்களிகக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான ஏதேனும் வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத விதிகளையாக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினர்களால் செலுத்தப் படற்பாலனவான கட்டணங்கள், அவர்களைச் சேர்த்தலும், மீளப்பெறுதலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவி நீங்குதலும் ;

(ஆ) பேரவையைத் தேர்தெடுத்தல் அல்லது பதவி தாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் பேரவை உறுப்பினர்களின் தத்துவங்களும் கடமைகளும், நடத்தையும்;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனமும், தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், நடத்தையும் ;

(ஈ) பேரவையின், கூட்டுத்தாபனத்தின் அல்லது அதன் ஏதேனும் உபகுழுவின் கூட்டங்களிற் பின்பற்றப் படவேண்டிய நடவடிக்கை முறையும் அக்கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும் வெற்றிடங்களை நிரப்புதலும், அத்தகைய கூட்டங்கள், பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சி நிரலும் அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) பேரவையிலான அத்துடன் கூட்டுத்தாபனத்திலான உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகுதியீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும்; முகாமை செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதவையாகவிராத அளவுக்கு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகள் கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் அதே முறையிலும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒரு விதியைப் போன்று திருத்தப்படலாம் , மாற்றப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கெதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.**(1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாகப் பெறப்படவுள்ள எல்லாப்பணங்களும், பேரவை தீர்மானிக்கக் கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**9.** (1) பேரவையானது, கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டு செலவிடப்பட்ட எல்லாப் பணங்களும் பற்றித் தகுந்த கணக்குகள் வைத்திருக்கப்படச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஒரு தடவையாவது பரிசோதனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

மன்றத்திட மிருந்து செல்மதியாக உள்ளனவும் அதற்குச் செலுத்தப்படவுள்ள னவுமான கடன்கள்

**10.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்துக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டும் என்பதுடன் அந்த நாளில் மன்றத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

*கூட்டுத்தபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**11.** ஏதேனும் கொள்வனை, மானியக்கொடை, கொடை அல்லது குத்தகைக்குச் சாதனத்தின் மீது அல்லது அதன் பயனைக் கொண்டு அல்லது ஏதேனும் இறுதிவிருப்பாவணக் கையளிப்பின்மீது அல்லது அதன் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கான விதிகளுக்கமையவும் அல்லது தொடர்புபட்ட கையாளுகைச் சாதனத்தின் நோக்கங்களுக்காகவும் அதிலுள்ள நம்பிக்கைப் பொறுப்புக்களின் மீதும் அதில் அடங்கியுள்ள நிபந்தனைகளுக்கமையவும் (நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் தொடர்புப்பட்ட கையாளுகைச் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு எப்போதும் அமைய) அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாள, வில்லங்கத்துக்குட்படுத்த அல்லது பொறுப்பிக்க உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12.** கூட்டுத்தபானத்தின் இலச்சனையானது, பேரவையின் ஓர் உறுப்பினரினதும் செயலாளரினதும் அல்லது பேரவையினால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆளினதும் முன்னிலையில் அன்றி எத்தன்மைத்தான சாதனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது, அவர்கள் தாங்கள் சமூகமளித்தமைக்கு அடையாளமாக சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதனின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**13.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் கடன்களை அல்லது பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரிடமிருந்து போமதியாக இருக்கக்கூடிய அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத் தொகையை விஞ்சிய ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கலைப்பின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதேனும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையும் ஆன வேறேதேனும் நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களுக்கு, அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** *(பிரிவு 4 (2))*

**தலைவரும் பணிப்பாளர் நாயகமும் :-**

*திரு. காமினி லொக்குகே*

**உபதலைவர்கள் :-**

*திரு. சிறிநால் டி மெல்*
*திரு. எம். சம்சன் சில்வா*
*திரு. ரீ.ஏ.டீ. ஆரியதாச*
*திரு.எல்.ஏ.வணிகசூரிய*
*திரு. சிறினிமல் கத்திரிஆரச்சி*

**செயலாளர் :-**

*திரு. சந்திர ஜயசிங்க*

**உதவிச் செயலாளர்கள் :-**

*திரு. டி. வில்லியம் ஆட்டிகல*
*திரு. மகிந்தகுமார விஜேரத்ன*

**பொருளாளர் :-**

*திரு. லலித் விக்கிரமசிங்க*

**குழு உறுப்பினர்கள் :-**

*திரு. விமல் விக்கிரமரத்ன*
*திரு. சிசிர ஜயவர்தன*
*திரு. அல்பிரட் சமரக்கோன்*
*திரு. விமலசேன ஜயவீர*
*திரு. பி.எல். டபிள்யு. குமாரகே*
*திரு. ஆனந்த சரத்குமார ஜயசிங்க*
*திரு. நந்தசேன அமரசிங்க*
*திரு. பிரேமவர்தன அபேரத்ன*
*திரு. அசோக பரணவிதான*
*திரு. ரணசிங்க கல்தேரா*
*திரு. பர்னாட் ரம்யகுமார டி கொஸ்தா*
*திரு. கே. கே. சோமதிலக*
*திரு. எஸ். வீரசிங்க*
*திரு. லொயிட் பெரேரா*
*திரு. ஏ.ஏ.டி உபேசிறி*
*திரு. டி விஜேதுங்க*
*திரு. என். எச். பெரேரா*
*திரு. கல்கி பத்திரண*
*திரு. டீ.எம்.லொகுகே*
*செல்வி தர்ஸி லொகுகே*
*செல்வி கயானி லொகுகே*
*திரு. நிமல் முனசிங்க*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*